**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 27/2023**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | V. மகாலிங்கம் | | |
| **தந்தை பெயர்:** | வைரபெருமாள் | **தொழில்:** | சுயதொழில் |
| **கிராமம்:** | அறந்தாங்கி | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | | **வயது :** | 43 /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

**<u>03.07.2025</u>**

**எதிரி ஆஜரில்லை.**

**எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் புகர்தாரராவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொண்டு எனது தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்களை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். எனது தரப்பு சாட்சியத்தினை ஏற்று எதிரிக்கு தக்க தண்டனையும், எனக்கு இழப்பீடும் கிடைக்க உத்தரவிடுமாறு வேண்டுகிறேன்.

1) 15.12.2022-ம் தேதியிட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா தஞ்சாவூர் வங்கி கிளையின் காசோலை(காசோலை எண்:553440) அசல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2) 19.12.2022-ம் தேதி வழக்கு காசோலையை பேங்க் ஆப் பரோடா வங்கி அறந்தாங்கி கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்ததற்கான செலான் அசல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3) 22.12.2022-ம் தேதி பேங்க் ஆப் பரோடாா வங்கியின் அறந்தாங்கி கிளையின் குறிப்பாணை அசல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4) 11.01.2023-ம் தேதி புகார்தாரர், எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது அசல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5) 14.01.2023-ம் தேதி புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான **Online (Postal Tracking)** ரசீது-நகல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6) 18.01.2023-ம் தேதி புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான **Online (Postal Tracking)** ரசீது-நகல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.